©
GOVERNMENT OF TAMIL NADU
2021

**[Regd. No. TN/CCN/467/2012-14.**
**[R. Dis. No. 197/2009.**
**[Price : Re. 0.80 Paise.**

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 36] CHENNAI, WEDNESDAY, SEPTEMBER 8, 2021
Aavani 23, Pilava, Thiruvalluvar Aandu–2052

## Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**CONTENTS**

| புதைபொருள் அறிவிப்பு | *Pages.* |
|---|---|
| இந்திய புதைபொருள் சட்டம் 1878-ன் பிரிவு 4-ன் படி அறிவிப்பு .. .. .. | 146 |

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**புதைபொருள் அறிவிப்பு**

**இந்திய புதைபொருள் சட்டம் 1878-ன் பிரிவு 4-ன் படி அறிவிப்பு**

*(ந.க.எண் 10736/2019/ஆர்4)*

No.VI(2)/81/2021.

திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல் (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் உட்கோட்டம், இரயில்வே யார்டில், இரயில்வே கி.மீ. 431/900 – 432/00–ல் அமைந்துள்ள இரயில்வே கடவு எண். 309–க்கு பதிலாக திண்டுக்கல் ஹனுமந்தன் நகரில் சாலை மேம்பாலம் கட்டுதல் பணியின் போது பாலத்தூண் 20–ன் அருகில் அமைந்துள்ள காளியம்மன் கோவிலிலிருந்து தேவியர்களுடன் கூடிய விஷ்ணு கற்சிலை கிடைக்கப்பெற்றது. மேற்படி சிலையானது உட்கோட்ட கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலைகள்) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் திண்டுக்கல் (நெ) மூலம் பழனி அரசு அருங்காட்சியகத்தில் 08–02–2019 அன்று ஒப்படைக்கப்பட்டு பாதுகாப்பாக உள்ளது. சிலையின் விபரம் பின்வருமாறு:

| *வ.எண்.* | *புதைபொருள் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|
| 1. | தேவியர்களுடன் கூடிய விஷ்ணு கற்சிலை | 1 |

மேற்காணும் புதைபொருள் தொடர்பாக புதையல் மீது முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ உரிமை கோரும் அனைவரும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) முன்பாக நேரிலோ அல்லது தன்னால் முறைப்படி நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி மூலமாகவோ ஆஜராகி உரிமை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி உரிமை கோரல் தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) முன்பாக 20–09–2021, 20–10–2021, 22–11–2021 மற்றும் 20–12–2021 ஆகிய தேதிகளில் நேரிலோ அல்லது தன்னால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி மூலமாகவோ தங்கள் உரிமை தொடர்பான ஆதாரங்களுடன் நேரில் விசாரணைக்கு ஆஜராகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

புதைபொருள் சட்டம், பிரிவு 9–ன்படி மேற்படி புதையல் தொடர்பாக எவரும் உரிமை கோரவில்லை என்றாலோ அல்லது கோரப்பட்ட உரிமை தக்க ஆதாரமின்மையால் நிராகரிக்கப்பட்டாலோ கண்டெடுக்கப்பட்ட புதைபொருள் உரிமையற்றது (Ownerless) என முடிவு செய்து ஆணையிடப்படும்.

திண்டுக்கல்,
2021 ஜூலை 30.

**ச. விசாகன்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU